# நீளாதேவி பஞ்சகம்.

ஆழியாக இருப்பவளே நின்மடிமீது ,
ஆழிக் கரத்தானும் துயில்கொள்ள ;
ஊழிதோறும் அவன் கூடவே ஒரு ,
தோழியாக இருப்பவளும் நீயன்றோ ! 1.

அடைக்கலம் என்று அடைந்தவரை ,
கடைக்கண் பார்வையால் உணர்த்தி ;
தடையின்றி ஏற்க எம்பெருமானுக்கு ,
விடை கொடுப்பவளும் நீயேயன்றோ ! 2.

ஆழ்கடல் துறந்து நப்பின்னையாகி நீ ,
ஏழ் எருதுகள் அடக்கியவனுக்கு தலை
தாழ்த்தி அவனை மணாளனாக ஏற்று ,
வாழ்ந்து காட்டியவளும் நீயேயன்றோ ! 3.

உறையூர் தலத்தினில் அர்ச்சையாக ,
உறைகின்ற உனை நாடிவரும் பக்தர் ;
நிறைவான வாழ்வைப் பெற்று பின்பு ,
கரைசேர அருள்பவளும் நீயேயன்றோ ! 4.

மீளாத்துயரில் கிடக்கும் மானிடரை ,
நீளாதேவியே நீயும் காத்தருளாமல் ;
வாளாயிருந்தால் என்தன் மனமும் ,
தாளாது துடிதுடித்து வருந்துமன்றோ ! 5.